## சென்னை வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் சேவை

# பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

## ₹3,640 கோடியில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல்




சென்னை வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். அருகில், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், சபாநாயகர் தனபால், அமைச்சர் எம்.சி.சம்பத்.

சென்னை, பிப். 15: சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையிலான மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். மேலும் 3 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழகத்தில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதற்காகவும், முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதற்காகவும் பிரதமர் மோடி நேற்று காலை சென்னை வந்தார். காலை 7.50 மணிக்கு இந்திய விமான படைக்கு சொந்தமான தனி விமானத்தில் டெல்லியில் இருந்து புறப்பட்டு, 10.35 மணிக்கு சென்னை பழைய விமான நிலையம் வந்தடைந்தார். அங்கு அவரை தமிழக அரசின் தலைமை செயலாளர் ராஜீவ்ரஞ்சன்பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

காலை 10.40 மணிக்கு தனி ஹெலிகாப்டரில் புறப்பட்டு, 11 மணிக்கு சென்னை ஐஎன்எஸ் அடையாறு விமான படைதளத்துக்கு வந்தார். அங்கு அவரை கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர். அங்கிருந்து காரில் புறப்பட்டு, விழா நடைபெறும் சென்னை நேரு உள் விளையாட்டு

7ம் பக்கம் பார்க்க

### கருப்பு மாஸ்க் அணிய தடை

பிரதமர் மோடி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரு உள்விளையாட்டு அரங்கிற்கு வந்த பொதுமக்கள் கடும் சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் கருப்பு கலர் மாஸ்க் அணிந்து இருந்ததால் போலீசார் அகற்ற அறிவுறுத்தினார்கள். இதை தொடர்ந்து போலீசார் சார்பில் மாஸ்க் தரப்பட்டன. அதன்பிறகு அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

### நண்பர்களே

பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் மோடி வணக்கம் தமிழ்நாடு, வணக்கம் சென்னை என்று தமிழில் உரையை தொடங்கினார். தனது உரையில் அடிக்கடி நண்பர்களே என்று தெரிவித்தார். இவ்வாறு மொத்தம் 13 முறை மோடி நண்பர்களே என்று கூறினார்.